1973 நவம்பர் 27]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : செய்ய வேண்டியது மத்திய சர்க்கார். அவர்களுக்கு அப்படி ஒன்றும் யோசனை இருப்பதாகத் தெரியவில்லை.

போந்தவாக்கம் கிராமத்தில் புதிய ஏரி அமைப்பு.

*424 வினு—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், போந்தவாக்கம் கிராமத்தில் அமையும் ராள்ள கால்வாய் அணைத் திட்டமும், புது ஏரி அமைப்புத் திட்டமும் நிறைவேறுவதில் காலதாமதம் ஏன் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பிராந்திய அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சியாளரின் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டம் சில தொழில் நுட்பமாறுபாடுகளினுல் திருத்தி அமைக்க வேண்டியதாயிற்று. எனவே, இத்திட்டத்தை மேற்கொள்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : இந்தத் திட்டத்தின் மதிப்பீடு என்ன ? இந்தத் திட்டம் எப்போது முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்தத் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 51,500. இது விரைவில் எடுத்துக்கொள்ளப்படும்.

காட்டுப்புத்தூர் வாய்க்கால் சீரமைப்பு.

*425 வினு—**திரு. சி. க. வடிவேலு :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா

(அ) திருச்சி மாவட்டம், தொட்டியம் தொகுதியில் உள்ள காட்டுப்புத்தூர் வாய்க்காலைப் புதுப்பித்து சீரமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) காட்டுப் புத்தூர் வாய்க்காலை புதுப்பித்து சீரமைக்கும் திட்டம் பொதுப் பணித் துறை அலுவலர்களின் ஆய்வில் உள்ளது. இத்திட்டம் அரசு பரிசீலனை செய்யும் கட்டத்தை இன்னும் அடையவில்லை.

திரு. சி. க. வடிவேலு: இந்தத் திட்டம் எப்போது நிறை வேற்றப்படும்? அதன் மதிப்பீடு என்ன என்று அறியவிரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது ஆய்வில்தான் இருக் கிறது. அரசின் பரிசீலனைக்கு வந்து நிதி ஒதுக்கீடு செய்கிறபோது தான் மதிப்பீடு தெரியும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: முன்பு குடிமராமத்து இருந்த காலத்தில் ஆண்டுதோறும் எல்லா வாய்க்கால்களும் சீரமைக்கப்பட்டன. தற்போது அந்த வேலை ஒழுங்காக நடை பெறவில்லை. அப்படியின்றி வருடாவருடம் தமிழகத்தில் உள்ள வாய்க்கால்கள் அனைத்தையும் சீரமைக்க நடவடிக்கை மேற் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கேள்வி காட்டுப்புத்தூர் வாய்க்காலைப் பற்றியது. குடிமராமத்து பற்றி தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

நாவக்கொல்லை கிராமத்தில் புதிய ஏரி.

*426 வினா—**திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் வட்டம், நாவக்கொல்லை கிராமத்தில் புதிய ஏரி கட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) இத்திட்டத்திற்கான மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது.